# வாழ்த்து மழைக்கு அன்பும், நன்றியும்!

## துணை முதல்வர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**துணை முதல்வர் – கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**

எனது பிறந்தநாளில் நேற்று முன்தினம் முதல் இடைவிடாத வாழ்த்து மழையில் நனைந்தேன். தமிழ்நாடு முழுவதும் இருந்து சென்னை வந்திருந்த உடன்பிறப்புகள் உங்களின் எல்லையில்லா அன்பினால் என்னை திக்குமுக்காடச் செய்துவிட்டீர்கள்.

தமிழ்நாட்டின் எட்டுத்திக்கிலிருந்தும் வந்த உங்கள் வாழ்த்தொலி இந்த பிறந்த நாளையும் சிறந்த நாளாக்கி இருக்கிறது. என்னை வாழ்த்துவதற்காக பல்லாயிரக்கணக்கில் சென்னைக்கு வருகை தந்த கழக உடன்பிறப்புகள் பத்திரமாக இல்லம் திரும்பி இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**பிறந்த நாளையொட்டி, கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்கள் நம்மை வாழ்த்தியதோடு மட்டுமின்றி, இளைஞரணியின் செயலாளராக – விளையாட்டுத்துறையின் அமைச்சராக – துணை முதலமைச்சராக நம் பணிகளை போற்றி பாராட்டியதை எண்ணி மகிழ்ந்தேன்.**

**தந்தையாகவும் – தலைவராகவும் வாழ்த்தி வழிகாட்டிய நம் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.**

அமைச்சர் பெருமக்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், மாவட்டக்கழகச் செயலாளர்கள், ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் – கிளைக் கழகச் செயலாளர்கள் – இளைஞரணியின் மாநில துணைச் செயலாளர்கள், மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் மற்றும் இளைஞரணி தம்பிமார்கள், பல்வேறு அணிகளின் பொறுப்பாளர்கள் என முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகள் அனைவரும் என்னிடம் காட்டியது கழக பாசத்தையும் விஞ்சிய குடும்பப் பாசம் என்பதை உளப்பூர்வமாக உணர்ந்தேன்.

எனது வேண்டுகோளை ஏற்று மாநிலம் முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆக்கப்பூர்வமான முறையிலும் கொள்கை வழியிலும் நிகழ்ச்சிகளை நடத்திவரும் கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகள்.

தேடித்தேடி வாங்கிய புத்தகங்கள், கருப்பு – சிவப்பு வேட்டி – விளையாட்டு உபகரணங்கள் – சட்டமன்றத் தேர்தலுக்கான நிதி – இளைஞர் அணி வளர்ச்சி நிதி – மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள், நினைவலைகளை எழுப்பும் புகைப்படங்கள் என நீங்கள் வழங்கிய பிறந்தநாள் பரிசுகள் எனது மனதை நிறைத்திருக்கிறது.

**அதே போல நேரில் வாழ்த்திய மக்கள் நீதி மய்யம் தலைவரும் – மாநிலங்களவை உறுப்பினருமான கலைஞானி கமல் சாருக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் – நாடாளுமன்ற உறுப்பினர் எழுச்சித்தமிழர் அண்ணன் திருமாவளவன் அவர்களுக்கும், தொலைபேசியில் என்னை வாழ்த்திய சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சார்**



**உட்பட அனைவருக்கும் என் நன்றி.**

**வாழ்த்துச் செய்தியாகவும், சமூக வலைத் தளங்களிலும் என்னை வாழ்த்திய தோழமை இயக்கத்தின் தலைவர்கள், நிர்வாகிகளுக்கு என்னுடைய நன்றி.**

என்னை நேரில் சந்தித்து வாழ்த்திய தமிழ்நாடு அரசின் அதிகாரிகள் – காவல் துறை அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் என் நன்றி. அன்பு ததும்பும் வாழ்த்துகளில் என்னை நெகிழ வைத்த திரையுலக உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் நன்றிகள் பல!

தந்தை பெரியார் – பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடங்களிலும், கோபாலபுரம், சி.ஐ.டி காலனி இல்லங்களிலும் திரண்டு வந்து வாழ்த்திய பொதுமக்கள் உட்பட அனைத்து தரப்பினருக்கும் எனது நன்றி.

பெரியார் திடலில் என் பிறந்த நாளையொட்டி கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவை ஏற்பாடு செய்து, அதில் என்னை பங்கேற்கச் செய்த சென்னை கிழக்கு மாவட்டக்கழகச் செயலாளர் – மாண்புமிகு அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும் என் நன்றி!

அதே போல நம்முடைய சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, இராயப்பேட்டையில் உள்ள மாநகராட்சி வீடற்றோர் காப்பகத்துக்கும் மற்றும் நுங்கம்பாக்கம் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பிரதான சாலை பகுதியில் உள்ள மாற்றுத்திறனாளிகள் இல்லத்துக்கும் என் மகளோடு சென்று, கேக் வெட்டி கொண்டாடியது மன நிறைவைத் தந்தது.

அங்கிருந்த மாற்றுத்திறன் சகோதரிகளும் – பாட்டிகளும் உள்ளன்போடு வாழ்த்தியது நெகிழ்ச்சியாக இருந்தது. அவர்களுக்கு என் நன்றி. இந்த சந்திப்பை ஒருங்கிணைத்த சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் நே.சிற்றரசு அவர்களுக்கு என் நன்றி.

**குறிஞ்சி இல்லத்தில் விழா ஏற்பாடுகளைச் செய்த சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மயிலை த.வேலு அவர்களுக்கும், அவருக்கு துணை நின்ற மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும் – இளைஞரணியினர் – குறிஞ்சி இல்ல பணியாளர்கள் அனைவருக்கும் என் நன்றி.**

**அதேபோல, பாதுகாப்பு ஏற்பாடுகளை மிகச்சிறப்பாக செய்திருந்த காவல் துறையினருக்கும் என் நன்றி.**

தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் உரிமைகளுக்கும் இன்னும் கடுமையாக உழைப்பது தான் உங்களது அளவிலா அன்பிற்கு நான் செய்யும் கைமாறாக இருக்கும்.

**கழகத்தலைவர் அவர்கள் கூறியுள்ள பிறந்தநாள் அறிவுரையின்படி, மக்களுக்காக களத்தில் நிற்பதும் – திராவிட இயக்கக் கருத்தியலை பரப்புவதும் என்கிற பணிகளை இன்னும் வேகமாக தொடர்வோம்.**

**இந்த பிறந்த நாளில் நான் எத்தனையோ பரிசுகளை பெற்றிருந்தாலும், 2026-ல் கழகம் 7-ஆவது முறையாக வென்றது. கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து 2-ஆவது முறையாக முதலமைச்சர் ஆனார்கள் என்ற வரலாற்றை படைப்பதே நான் எதிர்பார்க்கும் மாபெரும் பரிசு.**

அந்த இலக்கை நோக்கி உடன்பிறப்புகள் நாம் ஒற்றுமையுடன் கரம்பற்றி நடைபோடுவோம். வாழ்த்துகளைக் குவித்த அனைவருக்கும் எனது அன்பும் நன்றியும்!

**வெல்வோம் இருநூறு!**
**படைப்போம் வரலாறு!!**

உங்கள்
**உதயநிதி!**

### விபத்தில் கைகளை இழந்த பீகார் மாநில இளைஞருக்கு

# குறுக்கு கைமீள் இணைப்பு மறுசீரமைப்பு நுண்அறுவை சிகிச்சை!

## ஒரு கையை செயல்பட வைத்த பெண் மருத்துவர்கள் குழுவினருக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்!



*சென்னை,நவ.30-*

***எதிர்பாராத விபத்தில் கைகளை இழந்த பீகார் மாநில இளைஞருக்கு குறுக்கு கைமீள் இணைப்பு மறுசீரமைப்பு நுண்அறுவை சிகிச்சை மேற்கொண்டு ஒரு கையை செயல்பட வைத்த பெண் மருத்துவர்கள் குழுவினருக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2025) பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.***

பீகார் மாநிலத்தை சேர்ந்த 28 வயதான தொழிலாளி ஒருவர் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு 26.9.2025 அன்று சென்னை பூங்கா (park) ரயில் நிலையம் அருகே, ரயில் விபத்தில் சிக்கி இடது கை தோள்பட்டைக்கு கீழே துண்டிக்கப்பட்டு தனியாகவும், வலது கை மணிக்கட்டு முழுமையாக சிதைந்த நிலையிலும் கடுமையான காயங்களுடன் இரயில்வே காவலர்களால் மீட்கப்பட்டு இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

பாதிக்கப்பட்ட நேயாளியை பார்வையிட்ட இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையின் முதல்வர் பேராசிரியர் மரு. சாந்தாராமன் அவர்கள் உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொண்டதோடு, மருத்துவமனையின் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை குழுவினரை வரவழைத்து பாதிக்கப்பட்ட இளைஞரின் நல்வாழ்க்கைக்கு சிறந்த சிகிச்சை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனடிப்படையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை பேராசிரியர் மரு. பி.ராஜேஸ்வரி தலைமையிலான பெண் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் பாதிப்பட்ட நபரை பார்வையிட்டு இதுபோன்ற நிகழ்வுகளில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை குறித்தும், இந்த நோயாளிக்கு ஒரு கையை யாவது பயன்படுத்தும் வகையில் அறுவை சிகிச்சை மேற்கொள்வது என்றும் கலந்தாலோசனை செய்து, மருத்துவமனையின் முதல்வர் மற்றும் மூத்த அறுவை சிகிச்சை வல்லுநர்களின் அறிவுரை பெற்று சிகிச்சை மேற்கொள்ள முடிவு செய்தனர்.

அதனடிப்படையில், பேராசிரியர் மரு. சாந்தாராமன் அவர்களின் மேற்பார்வையில், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை குழுவினரான பேராசிரியர் மரு.பி.ராஜேஸ்வரி, உதவி பேராசிரியர்கள் உ.ரஷீதா பேகம், மரு.வி.எஸ். வளர்மதி, மரு.வி.சுவேதா மற்றும் முதுநிலை பட்ட மேற்படிப்பு பயிலும் மருத்துவர்களான மரு. ஷோனு, மரு. அன்னபூரணி, மரு. சி. சந்தோஷினி ஆகியோர் உடன் மயக்கவியல் மருத்துவர் ஜி. சண்முகப்ரியா அவர்களின் தலைமையிலான குழுவினர் இணைந்து இடது கையை, வலது மணிக்கட்டு பகுதியில் இணைக்கும் Cross hand replantation செய்ய முடிவு செய்தனர். இதன்மூலம் பாதிக்கப்பட்ட நபருக்கு குறைந்தது, ஒரு செயல்படும் கை மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

இதற்காக பாதிக்கப்பட்ட நபரின் இடது கையை, வலது மணிக்கட்டு பகுதியில் இணைக்கும் வகையில், எலும்பு கட்டமைப்பு திருத்தம், தசை, நரம்பு மற்றும் ரத்த குழாய் இணைப்புகள் என மிக நுணுக்கமாக 10 மணி நேரம் நீண்ட அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவக் குழுவினரின் அர்பணிப்பு உணர்வுடன் கூடிய நீண்ட அறுவை சிகிச்சையில் இரத்த குழாய் மறுசீரமைப்பு முடிந்த உடனே கையின் இரத்த ஓட்டம் தொடங்கி பொருத்தப்பட்ட கை வெற்றிகரமாக புத்துயிர் பெற்றது.

அறுவை சிகிச்சைக்கு பிறகு நோயாளிக்கு தீவிர சிகிச்சை பிரிவில் (ICU) மருத்துவ கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டது. இணைக்கப்பட்டகையில் நல்ல இரத்த ஓட்டமும், முன்னேற்றமும் ஏற்பட்டது. அவரது வலது கையின் முழுமையான செயல்பாட்டை மீட்டெடுக்க, தீவிர இயன்முறை சிகிச்சை மற்றும் மனச்சிந்தனை மீள் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

Cross hand replantation என்பது உலகளவில் மிகவும் அபூர்வமான, சவாலான அறுவை சிகிச்சையாகும். இரு கைகளும் துண்டிக்கப்பட்ட இடங்களில் குறைந்தபட்சம், ஒரு கை இருப்பது, தினசரி செயல்களில் சுயமாக செயல்பட நோயாளிக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

நோயாளி தமிழ்நாட்டைச் சேராதவர், அவரிடம் மருத்துவக் காப்பீட்டு அட்டை எதுவும் இல்லை, தெரிந்தவர்கள், உறவினர்கள் யாரும் உடன் வரவில்லை என்ற போதிலும், அவரது வாழ்வினை மீட்டெடுக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசின் வழிகாட்டுதலின்படி பெருமைமிகு மருத்துவ அலுவலர்கள், அரசு மருத்துவர்கள் இந்த சிறப்பு அறுவை சிகிச்சையை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த பெருமைமிகு செயல், இந்தியாவின் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை வரலாற்றில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். இத்தகைய அறுவை சிகிச்சை இந்தியாவிலேயே ஒரு அரசு மருத்துவமனையில் வெற்றிகரமாக செய்யப்பட்டது மூலமாக அரசு மருத்துவமனையில் மறுசீரமைப்பு நுண்அறுவை சிகிச்சையான CROSS HAND REPLANTATION எனப்படும் குறுக்கு கைமீள் இணைப்பு அறுவைசிகிச்சை சாத்தியம் என்பதை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் நிரூபித்துள்ளனர்.

மேலும், தமிழ்நாட்டின் சென்னை இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட குறுக்கு கைமீள் இணைப்பு மறுசீரமைப்பு நுண்அறுவை சிகிச்சையானது உலகளவில் பதிவு செய்யப்பட்ட நான்காவது, இந்தியாவில் இடம்பெறும் இரண்டாவது நிகழ்வாகும்.

இந்நிகழ்வில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், மருத்துவமனையின் முதல்வர் பேராசிரியர் மரு. சாந்தாராமன் மற்றும் அறுவை சிகிச்சை மேற்கொண்ட பெண் மருத்துவக் குழுவினர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.11.2025) சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கில், உடற்பயிற்சி கூடம், தடகள மைதானம், கிரிக்கெட் வலை பயிற்சி மைதானம் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற டிசம்பர் 7ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெறும் மாபெரும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்று ஒரு லட்சத்து 67 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார். அதற்கான முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில் அப்பணிகளை நகராட்சி நிர்வாக;ி துறை அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, பி.மூர்த்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராசன் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், தெற்கு பூமிநாதன், முன்னாள் மேயர் பெ.குழந்தைவேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கழகத்தினர் அதிகாரிகள் பங்கேற்றனர்.